மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை, கோரிக்கை வடிவத்தில் கொடுப்பார் என்றால் அது பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வேல் முருகன், சொல்லுங்கள்.

(இ) காட்டுமன்னார்குடி வட்டம், பெண் வட்டாட்சியரை வீடு புகுந்து தாக்கியது

திரு. தி. வேல் முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்குடி வட்டத்தில், வட்டாட்சியராகப் பணிபுரிகின்ற ஒரு பெண் அதிகாரியை ஒரு வன்முறைக் கும்பல், வீடு புகுந்து தாக்கி, இப்போது அந்த மாவட்டத்திலே பதட்டம் ஏற்பட்டு...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது என்னுடைய கவனத்திற்கே வரவில்லை. (குறுக்கீடு) துறை சம்பந்தமான ஏதாவது பிரச்சினைக்கு நீங்கள் பரிகாரம் காண வேண்டுமென்றால், சம்பந்தப்பட்ட அமைச்சரிடத்திலே சொல்லுங்கள்.

(ஈ) வெளிநாடுகளில் வேலைக்காகச் சென்று சிறையில் அடைக்கப்பட்டுக் கொத்தடிமைகளாக இருப்பவர்களை மீட்பது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 10 நாட்களுக்கு முன் தங்களிடத்திலே ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். தமிழகத்திலே, படித்துவிட்டு வேலையில்லாதவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று வேலை பார்க்க வேண்டுமென்ற ஆர்வத்தோடு மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கு, இங்கே இருக்கக்கூடிய agency மூலமாக வேலைக்குச் செல்கிறார்கள். அப்படி வேலைக்குச் சென்ற இடங்களிலே அவர்கள் மிகக் கொடுமைப்படுத்தக்கூடிய நிலையிலே, மிகக் குறைவான சம்பளத்தைப் பெற்று...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மணி அவர்களுக்கு, அதாவது 300-க்கும் மேற்பட்ட கவன ஈர்ப்புத் அறிவிப்புகள் வந்திருக்கின்றன. நாம் எந்த அளவுக்கு ஒரு நாளைக்கு எடுத்துக்கொள்ள முடியுமோ, எடுத்துக் கொள்கிறோம். எல்லாப் பிரச்சினைகளுமே முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால், இவற்றையெல்லாம் நாம் எடுக்க